பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 20] சென்னை: ஆனி 32 (15—7—72) சனி

வெளியூர்: ஆடி 1 (16—7—72) ஞாயிறு [இதழ்: 27

சேமிப்பு நிதியை முடக்கும் முதலாளிகள்

பிராவிடண்ட் நிதித் தொகையை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்கத் தவறும் தொழிற்சாலை நிர்வாகிகளுக்குக் கட்டாயச் சிறைத் தண்டனை விதிப்பது என மத்திய அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

இதுபோன்ற தொழிற்சாலை நிர்வாகிகளின்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தொழிற்சங்கத் தலைவர்கள் அரசை வற்புறுத்தி வந்தனர்; நாடாளுமன்றத்திலும் இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டது.

சாதிவழி அரசியலுக்குத் தூபமா?

[★]

கழகத்தின்மீது பழிசுமத்தி வகுப்புவாதத்தைத் தூண்ட முயற்சி

எழுபதாவது வயதில் காமராசர் புரியவிருக்கும் சாதனை!

தூங்கிக்கொண்டே கோட்டைவிட்டவர் தூங்காமல் செய்யப்போவது என்ன?

“நான் இனித் தூங்கப்போவதில்லை—உங்களையும் (மக்களையும்) தூங்கவிடப்போவதில்லை” என்று கூறிவிட்டார்—‘பெருந்தலைவர்’ காமராசர்.

இனித் தமிழ்நாட்டு மக்கள் எச்சரிக்கையாகத்தான் இருக்க வேண்டும்!

“காமராசர் தூங்கினால் பக்கத்தில் யாரும் இருக்க முடியாது; அவர் விடும் குறட்டை, மனிதர்களைக் காத தூரத்திற்குத் துரத்தியடிக்கும்” என்று காங்கிரசுக்காரர்களே சொல்லக் கேட்டிருக்கிறோம்.

புதுடில்லியில் ‘பசு வதைத் தடுப்பு’ என்ற பெயரால் ஜன சங்க ஆர்ப்பாட்டக்காரர்கள் காமராசர் வீட்டுக்குள் புகுந்து தாக்க முனைந்தபோது, குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்த காமராசரை எழுப்பி—புழக்கடை வழியாக வெளியே அழைத்துவந்து ஆபத்திலிருந்து காப்பாற்றிய தோழன்கூட தி.மு. கழகத்தைச் சேர்ந்தவன்தான்! வீட்டு வாயிலில் பல்லாயிரக்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்திக்கொண்டிருந்ததுகூடக் காதில் விழாதவாறு குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தவர்தானே இந்தக் காமராசர்!

1967 பொதுத் தேர்தலின்போது, ‘படுத்துக்கொண்டே ஜெயிப்பேன்’ என்று காமராசர் கொக்கரித்தபோது, அவரைப் பற்றி இராசகோபாலாச்சாரியார் கூறியது நினைவுக்கு வருகிறது.

இன்றைக்குக் காமராசருக்கு ஆசி கூறும் குருநாதராக உள்ள ஆச்சாரியார், அன்று விருகம்பாக்கத்தில் நடந்த திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் கலந்துகொண்டு பேசினார்:—

“ஸ்ரீமான் காமராசர், ‘படுத்துக்கொண்டே ஜெயிப்பேன்’ என்கிறார்! அவர் படுக்கப்போவது உண்மை; ஆனால் ஜெயிக்கப்போவது கிடையாது”

என்று அப்போது அவர் கூறினார்.

ஆச்சாரியாரின் ஆசீர்வாதத்தால், படுத்தவர் படுத்தவராகவே ஆகிவிட்டார்! தேர்தலில் அவர் தலைதூக்கவே இல்லை!

இன்று அதே ஆச்சாரியாரின் ‘ஆசீர்வாத’த்தைப் பெற்று அரசியலில் ‘புனர்ஜென்மம்’ எடுக்க முனைந்திருக்கிறார்!

ஆகையினால்தான், ‘தூங்கப்போவதில்லை’ என்கிறார்! அவர் தூங்குவதைப்பற்றியோ—தூங்காமல் இருப்பதைப்பற்றியோ யாருக்கும் கவலையில்லை; ‘மக்களையும் தூங்கவிடப்போவதில்லை’ என்று சொல்வதுதான் ஆராய்ச்சிக்குரியது!

இனி மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டியதுதான்!

காமராசர் தூங்கிக்கொண்டிருந்தபோதே அவரது சீடர்கள் நாட்டில், இவ்வளவு வன்செயல்களை நடத்தியிருக்கிறார்கள் என்றால், அவர் தூங்காமல் இருந்தால் என்றால் என்ன ஆகும்? மக்களையும் தூங்காமல் இருக்கச்செய்வார் என்றால் நிலைமை என்ன ஆகும்?

காங்கிரசு ஆளுங்கட்சியாக இருந்தபோது அவரது சீடர்கள் ஆடிய ஆட்டம் நாடறிந்த ஒன்று; அடுத்து எதிர்க் கட்சியாகிவிட்ட பின்னரும், சிண்டிகேட்—இண்டிகேட் என்று பாகப் பிரிவினை’ செய்துகொண்ட பிறகும், அவர்கள் எந்த அளவுக்குக் ‘குண்டர் படை’யாக மாறியிருக்கிறார்கள் என்பதையும் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்!

நேற்று, சத்தியமூர்த்தி பவனில் ஒரு வாரப் பத்திரிகையைத் துவக்கிவைத்துப் பேசிய காமராசர், தி.மு. கழகத்தையும்—கழக அரசையும் தமக்கே உரிய பாணியில் வசை பாடியிருக்கிறார்; அந்தப் பேச்சில்தான் ‘நான் தூங்கப்போவதில்லை’ எனச் சூளுரைத்திருக்கிறார்!

அவர் தூங்காமல் இருக்கும்வரை மகிழ்ச்சிதான்; ஆனால் அவர் எதற்காகத் தூங்காதிருக்கப்போகிறார் என்பதுதான் கேள்வி!

காமராசர் தூங்காமல் என்னவாவது செய்கிறார் என்றால், மக்கள் விழிப்போடு இருக்கவேண்டியது அவசியம்தான்; அவருடைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டுதான் இருக்க வேண்டும். நாம் தப்பித்தவறி அலட்சியமாக இருந்துவிட்டால், அரசியல் ‘ஜேப்படி’கள் நடைபெற்றுவிடும்.

தமிழ்நாட்டில் தி.மு. கழகம் சாதிப் பூசல்களை உருவாக்கிவருகிறதாம்; சமுதாயத்தைக் கெடுக்கத் திட்டமிட்டு முனைந்துள்ளதாம்; இதை எதிர்த்துத்தான் அவர் தூங்காமல் பாடுபடப்போகிறாராம்! உள்ளபடியே தமிழ்நாட்டு மக்களுக்கு இந்தச் செய்தி புதிதுதான்!

‘தி.மு. கழகம் சாதிப் பூசலை உண்டாக்குகிறது’ என்ற செய்தியை வேறு யாரால் சொல்ல முடியும்? காமராசரைப் போன்றவர்களுக்குத்தான் இப்படியெல்லாம் பேச முடியும்!

சாதியை ஒழிக்கவும்—சனாதன தர்மங்களை எதிர்த்தும் தமிழ்நாட்டில் கடந்த அரை நூற்றாண்டுக்கு மேல் தந்தை பெரியார் அவர்களும்—பேரறிஞர் அண்ணா அவர்களும்—திராவிடர் இயக்கமும் பாடுபட்டதன் பயனாகத்தான், இன்று தமிழ்நாட்டில் ஓரளவு சாதி சமய ஏற்றத்தாழ்வுகள் மறைந்தொழிந்திருக்கின்றன!

பெரியாரின் பேருழைப்பின் பலனாகத்தான், ‘பச்சை’த் தமிழர் காமராசரும் முதலமைச்சராக வர முடிந்தது!

திராவிடர் இயக்கம் என்பதே—சமுதாயத் துறையில் சாதி—சமயச் சழக்குகளை ஒழித்து மறுமலர்ச்சி ஏற்படுத்துவதற்காக ஏற்பட்டதுதான!

திராவிடர் இயக்கம் சாதி ஒழிப்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்ட காலத்திலெல்லாம், சாதியை வைத்து அரசியல் நடத்தி ஆதாயம் தேடிக்கொண்டிருந்தவர்கள்தான் காமராசர் திருக்கூட்டத்தார்’

சாதியையும் பணத்தையும் காட்டி ஓட்டு வேட்டையாடியதால்தான், தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சி இருபதாண்டுக் காலம் தொடர்ந்து ஆட்சி நடத்த முடிந்தது; ஒன்பதாண்டுக்காலம் காமராசர் முதலமைச்சராக இருந்து ஏகபோகமாகத் தமிழக அரசியலை நடத்தியதும் சாதி வழி அரசியலால்தான் என்பதை யாரால் மறுக்க முடியும்?

சாதிச் செல்வாக்கையும்—பணபலத்தையும் எதிர்த்துத்தான் 1967 தேர்தலில் தி. மு. கழகம் வாகை சூடியது; ‘இனி, சாதியோ பணமோ தேர்தலில் செல்லுபடியாகாது’ என்று ஆக்கிய பெருமை தி. மு. கழகத்தைத்தான் சாரும்!

குறிப்பாக, சாதியின் பெயரால் தேர்தலில் போட்டியிட்டவர்களெல்லாம் தி. மு. கழக வேட்பாளர்களால் முறியடிக்கப்பட்டார்கள்! எந்தச் சாதி எங்கு பெரும்பான்மையாக இருக்கிறதோ அங்கு அந்தச் சாதிக்காரரை வேட்பாளராக நிறுத்துவதுதான் காமராசரின் தேர்தல் தந்திரம்! அந்தத் தந்திரம் அறுபத்தேழில் முறியடிக்கப்பட்டது!

ஒரு சாதி பெரும்பான்மையாக உள்ள தொகுதியில்—அதே சாதி வேட்பாளரை—வேற்றுச் சாதியைச் சேர்ந்த தி. மு. கழக வேட்பாளர் தோற்கடித்த நிகழ்ச்சி அறுபத்தேழில் நடைபெற்றது; எழுபத்தொன்றிலும் நடைபெற்றிருக்கிறது! சாதிப் பெயரால் நடந்த கட்சிக்கு ஓர் இடம்கூட இல்லாமல் செய்தது தி. மு. கழகம்தான்!

இப்படிப்பட்ட தி. மு. கழகம்தான், ‘சாதிப் பூசலை வளர்க்கிறது’ என்று—சாதியைக் காட்டி ஓட்டுப் பெற்ற காமராசர் இப்போது கூறுகிறார்!

நாகர்கோவில் தேர்தலில் சொந்த சாதிக்காரர்களின் ஓட்டுக்களைப் பெற வேண்டும் என்பதற்காக, ‘காமராச நாடாருக்கு வாக்களியுங்கள்’ என்று சுவரொட்டி விளம்பரம் செய்து ஓட்டுப் பெற்ற காமராசர்தான், இன்று ஏதோ ஞானோதயம் பெற்றவர்போலப் பேசுகிறார்—‘தி. மு. கழகம் சாதிப் பூசலைக் கிளப்புகிறது’ என்று!

அவர் எதிர்பார்ப்பதுபோல் அவ்வளவு விவரம் தெரியாதவர்கள் அல்லர் தமிழ் மக்கள்! நல்ல அரசியல் தெளிவு பெற்றுவிட்ட காரணத்தால்தான், அறுபத்தேழோடு ‘காமராசர் அரசிய’லுக்குச் சீட்டுக் கொடுத்து வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள்!

சாதிப் பூசலை தி. மு. கழகம் கிளப்புவதாகக் கூறிச் சாதிக்காரர்களிடம் அனுதாபம் பெற்று—மீண்டும் தமிழ்நாட்டு அரசியலில் பழைய இடத்தைப் பிடித்துவிடலாம் என்று காமராசர் கனவு காண வேண்டாம்!

‘படுத்துக்கொண்டே ஜெயிப்பேன்’ என்று சொல்லி—இருந்ததையும் கோட்டைவிட்ட காமராசர் இப்போது, ‘தூங்கமாட்டேன்’ என்று சொல்லியிருக்கிறார்! தூங்கிக் குறட்டைவிட்டவர், இப்போது தூங்காமலே கோட்டைவிடப் போகிறார்!

அஞ்சல்—தந்தித் துறை தற்காலிகப் பதவிகள்

நிரந்தரமாக்கப்பட வேண்டும் என உத்தரவு

புதுடில்லி, ஜூலை 15—

அஞ்சல்—தந்தித் துறையில் நிரந்தரமாக்கப்பட வேண்டிய—ஆனால் தற்காலிகமாக இருந்து வரும்—எல்லாப் பதவிகளும் நிரந்தரமாக்கப்படுமென்றும், காலியாக இருக்கும் எல்லா நிரந்தரம் பதவிகளும் நிரப்பப்படுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இது சம்பந்தமான உத்தரவுகளை அஞ்சல்—தந்தித் துறை அமைச்சர் எச். என். பகுகுணா பிறப்பித்திருக்கிறார்.

அடுத்த அக்டோபர் 2-ம் நாளுக்குள் இப்பணி முடிக்கப்பட வேண்டுமென்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அஞ்சல்—தந்தித் துறை வட்டாரத் தலைவர்கள் இதைக் கவனமாகக் கண்காணிக்க வேண்டுமென்றும், அக்டோபர் மாதம் வரையில் இப்பணியின் முன்னேற்றம் குறித்து மாதாமாதம் அறிக்கை அனுப்பவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

மறியலில் கைதானோர்

விடுவிக்க உத்தரவு

சென்னை, ஜூலை 15—

தமிழ்நாட்டில் விவசாயிகள் மறியல் தொடர்பாகக் கைதானவர்கள்—தண்டனை விதிக்கப்பட்டவர்கள் அனைவரையும் விடுதலை செய்யும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்தக் கிளர்ச்சியின் போது, மறியலைத் தவிர இதர குறிப்பிட்ட குற்றங்களுக்காகக் கைதானவர்கள் பிரச்சினையில் இந்த உத்தரவு பொருந்தாது என்றும் அந்த அறிவிப்பு கூறியது.

சென்னையில் ஜூலை 5-ந்தேதி நடந்த அர்த்தால் தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டதாக சென்னை நகரப் போலீசுக் கமிஷனர் நிருபர்களிடம் கூறினார்.

விவசாயிகள் மறியல் தொடர்பாகக் கோவை மாவட்டத்தில் கைது செய்யப்பட்ட விவசாயிகள், கோவை—வேலூர்—திருச்சி ஆகிய நகரங்களிலுள்ள சிறைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

போபால், ஜூலை 15—

மத்தியப் பிரதேசத்தின் பண்டல் கண்ட் பகுதியில் இரண்டாவது பெரிய கொள்ளைக்காரனாக இருந்துவந்த பூரான் சிங் என்பவன், நேற்று முதலமைச்சர் சேத்தியின் முன்னிலையில் சரணடைந்தான்.

சமுதாய விடுதலைக்குப் பாடுபடுவது தி. மு. கழகமே!

ஒட்டுக்களை அல்ல -- மக்கள் உள்ளங்களை எதிர்பார்த்தே பணியாற்றுகிறோம்

முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

சென்னை ஜூலை 12—

"பொருளாதாரத் துறையில் முன்னேற்றத்தை -- விழிப்புணர்ச்சியை -- விடுதலையைச் சுலபமாகப் பெற்றுவிடலாம்; ஆனால் சமுதாயத் துறையிலிருந்து பெறும் விடுதலையைத்தான் சுலபமாகப் பெற முடியாது; அதற்காகப் பாடுபடும் ஒரு பேரியக்கம்தான் தி. மு. கழகம்!

"நமது சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு உரிய இடத்தில் உரிய பங்கு கிடைத்தால்தான், 'நாம் முழுமையாகவும் சிறப்பாகவும் முன்னேற்றத்தை அனுபவித்து வருகிறோம்' என்று அர்த்தமாகும்.

"தாழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதாரத் துறையில் மட்டும் விடுதலையடைந்தால் மட்டும் போதாது -- சமுதாயத் துறையிலேயும் விடுதலையடைய வேண்டும் -- என்று பாடுபட்டு வருகிறது இந்த அரசு!

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்னையில் நடந்த ஆதி ஆந்திரர்கள் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் குடிசை மாற்று வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., முரசொலி மாறன் எம்.பி., மாநாட்டுச் செயலாளர் எலமண்டா, சௌந்தரராசன் எம்.பி., ஆகியோரும் பேசினர்.

ஆதி ஆந்திரர் சங்கக் கௌரவச் செயலாளர் சி. ஆர். எஸ். இராசன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

முதலமைச்சர் கலைஞர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"ஆண்டாண்டுக் காலமாக இருந்து வருகின்ற அர்ச்சகர் முறையினை மாற்றி, 'அர்ச்சகர்களாக யாரும் வரலாம்' என்றாக்கி இருக்கிறோம்.

ஆலயத்தில் இருக்கும் ஆண்டவனுக்கு அந்த ஒரு குறிப்பிட்ட வகுப்பினர்தான் மந்திரம் சொன்னால் -- பூசை செய்தால் மகிழ்ச்சி ஏற்படுமா? அவர்களது மந்திரத்தைத்தான் ஆண்டவன் ஏற்றுக்கொள்கிறாரா? அவர்களுக்குத்தான் அந்தத் தகுதியிருக்கிறதா? ஏன் வேறு எவருக்கும் அந்தத் தகுதி இல்லையா? வராதா? தகுதி இருக்கக் கூடாதா?

சமுதாயத்திலே இருக்கின்ற தாழ்ந்தவர்களையும் ஆண்டவன் தான் படைத்தான் என்றால், சமுதாயத்திலே அவனுக்கு அனைவரும் சமமே; அதற்காகவே இயற்றப்பட்டது இந்தச் சட்டமாகும்.

"ஆண்டவன்முன் அனைவரும் சமம்' என்று கதாகாலட்சேபத்தில் சொல்வது உண்மையானால், 'தாழ்த்தப்பட்டவர்களும் அர்ச்சனை செய்யலாம்' என்றுதான் சட்டத்தைக் கொண்டுவந்தது இந்த அரசு!

தி. மு. கழகத்திற்கு வாக்கு அளித்தவர்களுக்குத்தான் நன்மை செய்கிறது இந்த அரசு என்பது சரியல்ல. 'வாக்கு அளித்தவர்கள் -- வாக்கு அளிக்காதவர்கள்'—'இவர்கள் இந்தக் கட்சிக்காரர்கள் -- இவர்கள் வேறு கட்சிக்காரர்கள்' என்ற பாகுபாடு செய்து பார்ப்பது அல்ல இந்த அரசு; வாக்கு அளித்தவர்களோ -- வாக்கு அளிக்காதவர்களோ -- அது யாராக இருந்தாலும் -- அவர் எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் -- இந்த அரசு அவர்களுக்காகவே -- அனைவருக்குமாகவே பணியாற்றும்.

தமிழகத்தில் உள்ளவர்கள் எவராக இருந்தாலும், அவர்களுக்காகவே நடைபெற்று வருகிறது -- இந்த அரசு!

இந்த அரசு ஒட்டுக்களை எதிர்பார்த்து அல்ல -- உள்ளங்களை எதிர்பார்த்து அரசு செயல்படுகிறது!

எவ்வளவுதான் நாம் படித்தவராக உயர்ந்த பதவியில் இருந்தாலும், அலட்சியப்படுத்தப்படுபவர்களாகத்தான் இருக்கிறோம்; 'அவர்கள் எண்ணிக்கை குறைவுதானே' என்று கூறலாம்; நான் அவர்களின் எண்ணிக்கையைப் பற்றிக் கவலைப்படவில்லை -- அவர்களின் எண்ணத்தைத்தான் விமர்சிக்கிறேன்.

'இவர்கள் என்ன சாதித்துவிட்டார்கள்' என்கிறார்கள்; நாங்கள் அணுகுகின்ற ஒவ்வொரு பிரச்சினைகளும் ஏழை எளிய மக்களை மையமாக வைத்துத்தான்!

சமுதாயத்தின் கீழ்த்தட்டில் தாழ்த்தப்பட்டவர்களாக -- ஒதுக்கப்பட்டவர்களாக -- சாக்கடை சகதிகளுக்குள்ளே நெளியும் புழுக்களாக இருக்கும் மக்களுக்கு என்ன செய்திருக்கிறோம் -- இந்தக் கேள்விக்கு விடை காண கடமைப்பட்டிருக்கிறோம்; அதற்காகத்தான், பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்க உறுதி எடுத்திருக்கிறோம் -- செயல்படுத்தி வருகிறோம்.

அதைப்போல், விழியிழந்து கிடக்கின்ற மக்களுக்கு ஒளி வழங்கத் திட்டமிட்டிருக்கிறோம்; இந்த ஆண்டு ஓர் இலட்சம் பேருக்குக் கண்ணொளி வழங்கப்படும்.

கண்ணொளி இழந்து -- வாழ்வில் தட்டுத் தடுமாறி தள்ளாடி -- பள்ளத்தில் விழுந்து -- பாடையிலே ஏறுகின்ற வரையில், ஒளியிழந்தவர்களாக இருக்கின்றவர்களுக்குக் கண்ணொளி வழங்கத் திட்டமிட்டிருக்கிறோம்.

"நீங்கள் தரம் தாழ்ந்தவர்களாக இருக்கின்ற காரணத்தால்தான் தரம் தாழ்ந்தவர்களைப் பற்றிக் கவலைப்படுகிறீர்கள்' என்று கூறுகிறார்கள்.

நாங்கள் தரம் தாழ்ந்தவர்களுக்கு உழைக்கின்ற தரம் தாழ்ந்தவர்கள் என்றால், இதைவிடத் தரம் உயர்ந்தது எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று சாதாரண மக்களுக்குப் பாடுபடும் அரசு வந்துள்ளது; 'எந்தக் கட்சி அரசு' என்று கூறுவதைவிட, உங்களுக்குப் பாடுபடும் உங்கள் சமுதாயத்துக்காக பாடுபடும் அரசு' என்று கூறலாம்.

அதற்கு உண்மையாகவே பெயர் சொல்வதானால், 'இது உங்கள் அரசு' எனலாம்.

இந்த அரசு உங்கள் உயர்வுக்குப் படும்; உங்கள் உயர்வுக்குத் தோள் கொடுக்கும்; நீங்கள் உயரச் செல்வதற்கு உரிய ஏணியாக இருக்கும்.

நீங்கள் ஏறிய பின் ஏணியை எட்டி உதைத்தாலும் பரவாயில்லை -- இந்த அரசு என்றும் ஏணியாகவே இருக்கும்.

அப்படிப்பட்ட அரசுக்கு உங்களின் ஆதரவு என்றென்றும் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னை நிறுவனராகக் கொண்டு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்ட அண்ணா அறக்கட்டளையின் சார்பில் தமிழகத்தில் இதுவரையிம் தமிழில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ -- மாணவிகளுக்குப் பரிசுவழங்கி ஊக்கம் அளித்து வருகிறோம்; அதுபோல், இனிமேல் அண்ணா அறக் கட்டளையின் சார்பில் ஆதி ஆந்திர சமுதாயத்தில் பி.ஏ., எம்.ஏ. போன்ற பட்டப் படிப்பு படிக்க இருக்கின்ற ஆதி ஆந்திர மாணவர்களுக்கு உதவி அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

ஊராட்சி மன்றங்கள் தரவாரியாகப் பிரிக்கப்படும்

நிதி ஒதுக்கீட்டைப் பரவலாக்கும் நடவடிக்கை

சின்னசேலம் வரவேற்பில் அமைச்சர் நாவலர் தகவல்

கள்ளக்குறிச்சி, ஜூலை 15—

தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி ஒன்றிய சீரமைப்புத் திட்டத்தில், ஊராட்சி மன்றங்களைத் தரவாரியாக அமைப்பது முக்கிய அம்சம் என்றும், ஆறு தரங்கள் வகுக்கப்படும் என்றும், பரவலான நிதிகள் ஒதுக்கீட்டுக்கு இது வகை செய்யுமென்றும் கல்வி -- உள்ளாட்சித் துறை அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கூறினர்.

சின்னசேலம் ஊராட்சி ஒன்றிய வரவேற்பிக்குப் பதிலளித்துப் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:—

"ஊராட்சி ஒன்றியங்கட்கு வரி வருமான அடிப்படையில் அரசு மானியங்கள் ஒதுக்கப்படுகிறது; வரிகள் மீது மேல வரி விதிக்க அரசு கொடுத்துள்ள அனுமதியைப் பயன்படுத்தி வரி வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள ஊராட்சி மன்றங்களும் -- ஊராட்சி ஒன்றியங்களும் முயற்சிக்க வேண்டும்."

திரு எம். செல்வராசு எம்.எல்.ஏ. தலைமைவகித்தார்; ஒன்றியத் தலைவர் சுப்பராய மூப்பனர் வரவேற்புரை படித்தளித்தார்.

சின்னசேலம் ஊராட்சி ஒன்றிய ஊழியர் சங்கமும் வரவேற்புரை வழங்கியது.

ஆணையர் எஸ். ஆர். கோசலகிருஷ்ணன் நன்றி கூறினர்

நகரத் துப்டரவாளர் குடியிருப்பை நாவலர் திறந்துவைத்தார்.

சின்னசேலம் பேரூராட்சித் தலைவர் டி. சேசவலு எம்.எல்.ஏ. தலைமைவகித்தார்.

நடமாடும் விஞ்ஞான ஆய்வுக்கூடம்

மாவட்டங்கள் தோறும் ஏற்படுத்தப்படும்

கள்ளக்குறிச்சி பள்ளி விழாவில் நாவலர் தகவல்

கள்ளக்குறிச்சி, ஜூலை 14—

வடக்கநந்தலில் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் இரு கட்டடங்களைக் கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்.

இப்பள்ளியில் விஞ்ஞான ஆய்வுக்கூடம் அமைக்க உதவ வேண்டுமென்ற கோரிக்கை பற்றி அமைச்சர் குறிப்பிட்டுப் பேசுகையில், 500 மாணவர்கள் உள்ள பள்ளிகட்கு ஆய்வுக்கூட வசதி செய்வதென்ற நடைமுறை இருந்து வருவதையும், 1,000 பிள்ளைகள் படிக்கும் பல பள்ளிகளில் ஆய்வுக்கூடங்கள் இல்லாமல் இருப்பதையும் சுட்டிக்காட்டினர்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நடமாடும் ஆய்வுக்கூடம் வீதம் இவ்வாண்டில் ஒதுக்கப்படும் என்றும், ஆய்வுக்கூடம் இல்லாத பள்ளிகட்கு மாதம் இருமுறை அது வருமென்றும் அமைச்சர் கூறினர்.

திரு. என். நாச்சியப்பன் எம்.எல்.ஏ. தலைமைவகித்தார்.

புதிய கட்டடங்கள் ரூ 67,000 செலவில் எழுப்பப்பட்டன.

பூவிருந்தவல்லி பேரூராட்சி சாதனை

தார்ச் சாலை அமைப்பதில் தமிழகத்திலேயே முதலிடம் வகிக்கிறது

குடிநீர்த் திட்டத்துக்கு எல்.ஐ.சி.-யிடமிருந்து கடன்

மதுராந்தகம், ஜூலை 13—

செங்கற்பட்டு மாவட்டம் பூவிருந்தவல்லி பேரூராட்சிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தர ஆயுள் காப்பீட்டுக் கழகம் (எல்.ஐ.சி) ரூ. 24,40,000 அளித்திருக்கிறது"

என்று பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத் தலைவர் டி. இராசரத்தினம், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் கூறியதாவது:—

"முதல் தவணையாக ரூ. 11 இலட்சம் தரப்பட்டிருக்கிறது; முதல் கட்டப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

இந்தத் திட்டம், தமிழ்நாடு குடிநீர் -- வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழகத்திலேயே முதன்முதலாக ஒரு பேரூராட்சியில் உள்ள தெருக்கள் அத்தனையும் தார் பாதைகளாக மாற்றியமைக்கும் திட்டம் பூவிருந்தவல்லியில் மேற்கொள்ளப்பட்டு -- இதுவரையில் 70 சதவிகிதப் பணிகள் முடிவடைந்திருக்கின்றன.

பூவிருந்தவல்லியில் உள்ள தெரு விளக்குகள் அத்தனையும் குழல் விளக்குகளாக மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன.

பிற மொழிகளில் அண்ணாவின் இலக்கியம்

அமைச்சர் இராசாராம் யோசனை

சென்னை அண்ணா அகாடமியின் ஐந்தாவது கருத்தரங்கு 2—7—72 காலை 10-மணியளவில் அண்ணா சாலையில் உள்ள மாவட்ட மத்திய நூலகத்தில், திரு. வே. தங்கசாமி தலைமையில் நடைபெற்றது; செயலாளர் தா. மாணிக்கம் வரவேற்றுப் பேசினர்.

பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. க. இராசாராம், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், திருமதி அமுதா இராகவன், திரு. கே. ஏ. நடராசன் எம்.ஏ., திரு. இலா. நமசிவாயம் ஆகியோர் 'அண்ணாவின் இலக்கியங்கள்' பற்றிச் சிறப்புரையாற்றினர்.

அமைச்சர் க.இராசாராம் அவர்கள், அண்ணாவினுடைய இலக்கியங்களை மற்ற மொழி பேசுபவர்களும் அறிந்துகொள்ளும் வகையில் மொழிபெயர்க்கும் முயற்சியை இதுபோன்ற அகாடமிகள் மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுரை கூறினர்.

மற்றும், பிறமொழி வல்லுநர்களை அழைத்துவந்து அண்ணாவின் கருத்துக்களைப் பற்றி பேசவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் பேசுகையில், 'அண்ணா அகாடமி போன்ற அமைப்புக்கள் —தமிழ் வளர்ச்சிக் கழகங்கள் போன்றவைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து 'தமிழ் இலக்கியத்தை வளப்படுத்த வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டார்.

துணைச் செயலாளர் கா. மு. பரணர் நன்றி நவின்றார்.

கோவை மாவட்ட பஞ்சாலை நிர்வாக ஊழியர் முன்னேற்றச் சங்கம்

கோவை மாவட்ட பஞ்சாலை நிர்வாக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் தேர்தல், திரு. வேலுமணி தலைமையில் நடைபெற்றது; அதுபோது தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

சிறப்புத் தலைவர்: எஸ். ஏ. இராசமாணிக்கம் எம்.எல்.சி.; தலைவர்: காட்டூர் கோபால் எம்.எல்.சி.; துணைத் தலைவர்கள்: ஆர். தேவராசு, பார்த்தசாரதி; பொதுச்செயலாளர்: பி. கருப்புசாமி; செயலாளர்கள்: எஸ் தேவராசு, கோவை பாலு; பொருளாளர்: குப்புசாமி; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 14 பேர்.

கோவை மாவட்ட திராவிடத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

மேற்படி சங்கத்தின் மாவட்டத் தலைமை நிர்வாகிகள் தேர்தல் கோவை பாலு தலைமையில் நடைபெற்றது; அதுபோது தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

சிறப்புத் தலைவர்: கி. அரங்கநாதன் எம்.எல்.ஏ.; தலைவர்: க. ரா. சுப்பையன்; துணைத் தலைவர்கள்: பி. அய்யாசாமி, குழந்தைவேல், இரத்தினம்; பொதுச்செயலாளர்: பி. கருப்புசாமி; செயலாளர்கள்: எஸ் தேவராசு, குப்புசாமி, ஆறுமுகம் (திருப்பூர்); பொருளாளர்: கோபிநாத்; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 16 பேர்.

பேட்டவாய்த்தலையில் கடையடைப்பு இல்லை

சென்ற ஜூலை 5-ஆம் நாள் பேட்டவாய்த்தலையில் அர்த்தால்—கடையடைப்பு நடைபெறவில்லை.

தி. மு. கழகம் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப, எல்லா வியாபாரிகளும் கடைகளைத் திறந்து வியாபாரம் செய்தனர்; இங்குள்ள சர்க்கரை ஆலையும் எவ்விதத் தடங்கலுமின்றி இயங்கியது.

கடையடைப்பு -- வேலைநிறுத்தங்களுக்கு ஆட்படாமல் வழக்கம் போல் கடை திறந்தும் -- அலுவல்களை நடத்தியும் ஒத்துழைத்த அனைவருக்கும் தி மு. க. சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

திருச்சி -- மேலப்புதூரில் கலைஞர் பிறந்த நாள் விழா

28—6—76 அன்று திருச்சி மேலப்புதூர் அரசமரத் தெருவில் கலைஞர் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம் திரு. ஜி. சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது.

அமைச்சர் க இராசாராம், திரு. அன்பில் தர்மலிங்கம், எம். எஸ். வெங்கடாசலம், கொடுமுடி கிருஷ்ணன், கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம், எம். எஸ். மணி, எஸ் ஏ. ஜி ராபி, ஏ. வி கிருஷ்ணமூர்த்தி எம்.சி. த. செவந்திலிங்கம் எம்.சி., ஏ. மலர்மன்னன் எம்.சி., கே. இராமசாமி, மு. அருங்குணவன் மற்றும் பலர் பேசினர்.

வானொலியில் கா. வேழவேந்தன்

'தமிழிலக்கிய அரங்கில் கபிலர்' என்ற தலைப்பில், சென்னை வானொலியில், கவிஞர் கா. வேழவேந்தன் 18—7—72 இரவு 9-30 மணிக்குப் பேசுகிறார்.

எறும்புகள் பேசும் மொழி

மாஸ்கோ, ஜூலை 13—

எறும்புகள், மூன்று விதமான அடையாளங்கள் மூலம் பேசிக் கொள்கின்றனவாம்.

சில அடையாளங்கள் -- கட்டளைகளாக இருக்கும்; வேறு சில -- புதிய வாசனைகளை உணர்த்தப் பயன்படும்; மற்றும் சில -- தேவைகளை வெளிப்படுத்த உதவும்.

இத்தகவலை, இரஷ்ய பூச்சி விஞ்ஞான நிபுணர் மாரிகாவ்ஸ்கி தெரிவித்திருக்கிறார்.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு
மணமக்களுக்கு ஒரு மகத்தான பரிசு.
தமிழ்நாடு பரிசுச் சீட்டு வாங்குவீர்.
ரூ. ஒரு லட்சம் பரிசு பெறக்கூடும்
மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 7,00,000*
முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்
(ஒவ்வொரு வரிசைக்கும்)
குலுக்கல் நாள்: 31-7-1972
பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

செலவு ஒரு ரூபாய்
வரவோ லட்ச ரூபாய்
கடிதத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9
*2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

புதுக்கோட்டையில் பொதுக்கூட்டம்

கழகத் தலைவர் கலைஞர் பங்கேற்பு

புதுக்கோட்டை, ஜூலை 15—

12—7—72 ல், புதுக்கோட்டை திலகர் திடலில் மாபெரும் தி.மு.க. பொதுக்கூட்டம், திருச்சி மாவட்ட தி. மு க. செயலாளர் எம். எஸ் வெங்கடாசலம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், கழகத் தலைவர் கலைஞர் திரு. வ. தியாகராசன் எம்.எல்.ஏ., கே. வி. சுப்பையா எம்.எல்.ஏ., க. வீரையா எம்.பி., வீ. சா. இளஞ்செழியன், க. தங்கராசு (குன்னத்தூர் வட்டச் செயலாளர்), லெ. முத்துவீரப்பன் (திருமயம் வட்டச் செயலாளர்), பா. செழியன் எம்.சி., க. சிங்கமுத்து, எம். மீனாட்சி, மற்றும் பலர் பேசினர்.

மாலை 5 மணியளவில் பஸ் நிலையத்திலிருந்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஊர்வலமாகத் திலகர் திடலுக்கு அழைத்துவரப்பட்டார்.

மாவட்டச் செயலாளருக்கு மோதிரம் அணிவிப்பு

மாவட்டச் செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம் அவர்களுக்கு புதுக்கோட்டை நகரத்தில், கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் மோதிரம் அணிவித்தார்.

புதுக்கோட்டை 7-வது வட்டத்தில் நடைபெற்ற இடைத் தேர்தலில், கழக வெற்றிக்கு அரும்பாடுபட்டதற்காக நகர தி. மு. கழகம் மோதிரம் ஒன்று பரிசளித்தது; அந்த மோதிரத்தை கலைஞர் அவர்கள், மாவட்டச் செயலாளருக்கு அணிவித்தார்.

கரூர் நகர தி.மு.க. உறுப்பினர் கூட்டம்

28—6—72-ல் கரூர் நகர தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது; திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம் தலைமை தாங்கினர்.

கழகத் துணைப் பொதுச்செயலாளரும் -- பிற்பட்டோர் நலத்துறை அமைச்சருமான திரு க. இராசாராம் அவர்கள் கழக ஆக்கப் பணிகள் குறித்துக் கருத்துரையாற்றினர்; மற்றும் பலரும் பேசினர்.

சென்னை -- இராயப்பேட்டை திருவள்ளுவர் மன்றம்

சென்னை -- இராயப்பேட்டை திருவள்ளுவர் மன்றத்தின் 10-வது ஆண்டு நிர்வாகிகள் தேர்தல் 2—7—72-ல் திரு. பொ. நா. சண்முகம் தலைமையில் நடைபெற்றது; அதுபோது தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

தலைவர்: ஆர். எம். வீரப்பன்; துணைத் தலைவர்கள்: க. செகதீசன், த. சந்திரசேகரன்; பொதுச்செயலாளர்; த. இராசு பாலசுப்பிரமணியம்; செயலாளர்கள்: நா. பிரபாகரன், எம். எஸ் வேலன்; பொருளாளர்; அரசு இராமு; கலைத்துறை ஆலோசகர்கள்: எஸ். முருகன், எம். எஸ். இராமன்; மற்றும் எட்டு பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

தென்னக இரயில்வே கூட்டுறவுப் பண்டகசாலை

முன்னேற்றச் சங்கத் தோழர்கள் தேர்வு

25—6—72 அன்று நடைபெற்ற செங்கோட்டை, தென்னக இரயில்வே ஊழியர் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலையின் மூன்று இயக்குநர்களுக்கான தேர்தலில், இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின், செங்கோட்டை கிளையின் செயலாளர் செல்லத்துரை, செயற்குழு உறுப்பினர்கள் குருசாமி கரையாளர், ஆபிரகாம் ஆகியோரும் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அதன்பிறகு நடைபெற்ற இயக்குநர்கள் கூட்டத்தில் செல்லத்துரை பண்டகசாலையின் தலைவராகவும், குருசாமி செயலாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

திருநெல்வேலி கூட்டுறவு பண்டகசாலைத் தேர்தல்

முன்னேற்றச் சங்கத் தோழர்கள் வெற்றி

30—6—72 அன்று நடைபெற்ற திருநெல்வேலி தென்னக இரயில்வேத் தொழிலாளர் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலையின் இரு இயக்குநர்களுக்கான தேர்தலில் மும்முனைப் போட்டியில் இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் நெல்லைக் கிளையின், துணைச்செயலாளர் இராமச்சந்திரன், கிளை உறுப்பினர் கைலாசம் ஆகியோர், தங்களை எதிர்த்து நின்ற ஐவரையும் தோற்கடித்துப் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார்கள்.

நூலக இயக்கத்தை ஊக்குவிக்கத் தனி இயக்குநர் -- தமிழக அரசு யோசனை

திருச்சி ஜூலை 14—

"தமிழ் நாட்டில் நூலக இயக்கத்தை ஊக்குவிக்கத் தனி நூலக இயக்குநரை நியமிக்க அரசு எண்ணியிருக்கிறது."

என்று, கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், திருச்சி மைய நூலகக் கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் தெரிவித்தார்.

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்றப் பேரவை

திருச்சி -- மாவட்ட அமைப்புக் கூட்டம்

2—7—72-ல் திருச்சி மாவட்ட தி. மு கழகச் செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்றப் பேரவை அமைப்புக் கூட்டம் நடைபெற்றுக் கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: வி. கிருட்டினமூர்த்தி, (தலைமை ஆசிரியர், அ. உ. பள்ளி, ஐயர்மலை)

மாவட்டச்செயலாளர்: புலவர் ச. பாலகுரு, (தமிழாசிரியர், அ. உ. பள்ளி, அரியலூர்).

துணை மாவட்டச்செயலாளர்: திரு. கே. முருகேசன், (இடைநிலை ஆசிரியர், அ. உ. பள்ளி, (நெற்குணம்).

பொருளாளர்: திரு. எ. முத்தையன், பி.ஏ.பி.டி. (தலைமை ஆசிரியர், அ. உ. பள்ளி, வாளாடி).

சட்ட திட்டக் குழுத் தலைவர்: திரு. எ. எ. சாமி, (தலைமை ஆசிரியர், அ. உ. பள்ளி லால்குடி).

மாநில அமைப்பாளர்கள்: புலவர் உலக ஒளி (தமிழாசிரியர், அ. உ. பள்ளி, (காணியாளம்பட்டு); திரு. ந. கார்த்திகேசன், பி.எஸ்சி.பி.டி., (அ. உ. பள்ளி, திருமழபாடி).

கூட்டத்தில் கூட்ட அமைப்பின் அவசியம்பற்றியும், கூட்டத்தின் விதிமுறைகள்பற்றியும், எம். எஸ். வெங்கடாசலம், வை. இரத்தினவேலு, எ. முத்தையன், எ. எ. சாமி, ந. கார்த்திகேசன், புலவர் ச. பாலகுரு, கே. முருகேசன் ஆகியோர் பேசினர்.

புலவர் ச. பாலகுரு நன்றி நவின்றார்.

அறிஞர் அண்ணா தமிழ்க் கல்லூரி

ஜூலை 20-ல் வகுப்புகள் துவங்குகின்றன

சென்னை மாணவர் மன்றச் சார்பிம் இயங்கிவரும் அறிஞர் அண்ணா தமிழ்க் கல்லூரியில் புலவர் தேர்வுக்கான புகுமுகம்—இடைநிலை—இறுதிநிலை ஆகிய வகுப்புக்கள், 20—7—72 அன்று; தொடங்கவிருக்கின்றன; துறைபோகிய தமிழ்ப் பேராசிரியர்கள் பாடம் கற்பிக்கின்றனர்.

கல்லூரியின் சார்பில் தேர்வுக்குச் சென்ற அனைத்து மாணவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

புதிய வகுப்புக்களில் சேர விரும்புவோர், 18—7—72-ஆம் நாளுக்குள், "முகவரி அறிஞர் அண்ணா தமிழ்க் கல்லூரி மாணவர் மன்றம், சென்னை" என்னும் முகவரிக்குத் தொடர்பு கொள்க.

சேலம் நகராட்சி

காஞ்சி மணிமொழியார் -- பிரதாபச் சந்திரன் மறைவுக்கு இரங்கல்

சேலம், ஜூலை 16—

கடந்த 29—6—72 அன்று நடைபெற்ற சேலம் நகராட்சிமன்றக் கூட்டத்தில், தி. மு க. துணைப் பொதுச்செயலாளர் காஞ்சி மணிமொழியார், தி. மு. க. தொழிற்சங்கத் தலைவர் பிரதாபச் சந்திரன் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேறின.

இத்தீர்மானங்களை முன்மொழிந்தும் -- வழிமொழிந்தும், தோழர்கள் ஜி. கே. கோவிந்தராசன், கே. ஏ. முனியப்பன், பி. வி. சீனிவாசன் ஆகியோர் பேசிய பின் இரண்டு நிமிடம் அனைவரும் மௌனமாக எழுந்து நின்று மரியாதை தெரிவித்துக் கொண்டனர்.

செம்பூர் தி.மு.க.

பம்பாய் -- செம்பூர் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் 18—6—72-ல் திரு. காஜாபாய் தலைமையில் நடைபெற்றது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் 64-வது பிறந்தநாள் விழாவினை அக்டோபர் திங்களில் சிறப்பாகக் கொண்டாடுவதென்றும், விழாவிற்குத் தமிழக அமைச்சர் சி. பா. ஆதித்தனர் அவர்களையும், நெல்லை மாவட்ட செயலாளர் அழகியநம்பி பி.ஏ.,பி.எல். அவர்களையும் அழைப்பதென்றும் ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளைக் கொண்ட மலர் ஒன்றும் வெளியிடுவதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

திரு டி. எம். சாமி, திரு. பாஜாபாய், என். சண்முகவேல் ஆகியோர் நிர்வாகக்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கழகத் துணைச் செயலாளர் காஞ்சி மணிமொழியார், சிம்சன் தொழிலாளர் தலைவர் பிரதாப் சந்திரன், டி. என். சாமி அவர்களின் தந்தையார், என். சண்முகவேல் அவர்களின் தாயார் ஆகியோர் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

இரங்கல் கூட்டம்

பவானி, ஜூலை 15—

தமிழ்நாடு மருத்துவர் சங்கத் தலைவர் எஸ். எஸ். ஆனந்தம் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில், பவானி மருத்துவத் தொழிலாளர்கள் சார்பில் பெரியார் மருத்துவமனையில் ஒரு கூட்டம் நடைபெற்றது; திரு. பரமசிவம் தலைமைவகித்தார்; எஸ். வி. கிருட்டினசாமி, சு. கிருஷ்ணன், க. பழனிபப்பன், கருப்பையா, பெருமாள் மற்றும் பலர் பேசினர்.

பின்னர், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

திறக்கப்படாமலிருக்கும் தனியார் கல்லூரிகள்மீது நடவடிக்கை?

கேரளப் பல்கலைக் கழக சிண்டிகேட் முடிவு

சரியான சமாதானம் கிடைக்காவிடில் அங்கீகாரம் ரத்து -- மாணவர்களின் படிப்பு பாதிக்காமலிருக்க மாற்று ஏற்பாடு

திருவனந்தபுரம், ஜூலை 15--

கேரளத்திலுள்ள தனியார் கல்லூரிகளின் நிர்வாகத்தினர், கல்லூரிகளைத் திறக்க மறுப்பதால் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதுபற்றிக் கேரளப் பல்கலைக்கழக சிண்டிகேட்டிடம், மாநில அரசு அறிக்கை ஒன்றை அளித்திருக்கிறது; அந்த அறிக்கையின் அடிப்படையில், இதுவரையில் திறக்காமலிருக்கும் தனியார் கல்லூரிகளின் நிர்வாகத்தினருக்கு, 'ஏன் அவைகளின்மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது' என்று விளக்கம் கேட்டு நோட்டீசு அனுப்புவது என்று கேரளப் பல்கலைக்கழக சிண்டிகேட் முடிவு செய்திருக்கிறது.

இதற்குத் தனியார் கல்லூரிகளிலிருந்து தக்க சமாதானம் கிடைக்காவிடில், அவைகளுக்கு அளித்திருக்கும் அங்கீகாரத்தை ரத்து செய்துவிடும் நிலைமை ஏற்பட்டுவிடக்கூடும்.

மாணவர்களின் கல்லூரிப் படிப்புப் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான மாற்று ஏற்பாடுகள் செய்வதுபற்றியும் பல்கலைக்கழக சிண்டிகேட் ஆலோசனை செய்தது.

ஏற்கனவே திறக்கப்பட்டுள்ள இளநிலைக் கல்லூரிகளின் தரத்தை உயர்த்தி அவைகளில் உயர் பட்டப்படிப்பு இருக்க வசதி செய்வது -- ஒவ்வொரு கல்லூரியிலும் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைச் சிறிதளவு அதிகப்படுத்துவது -- கல்லூரிகளில் 'ஷிப்டு' முறைகளைக் கொண்டு வருவதுபோன்ற பல ஏற்பாடுகளையும் சிண்டிகேட் ஆலோசித்தது.

இவ்வாறு ஏற்பாடுகள் செய்யப்படும்போது, மூடப்பட்டுள்ள கல்லூரி ஆசிரியர்களுடைய பணிகள் -- திறந்த கல்லூரிகளில் தற்காலிகமாகப் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

கேரளத்திலுள்ள 119 தனியார் கல்லூரிகளில்: 36 கல்லூரிகள் மட்டுமேதான் ஜூலை 10-ந் தேதிக்குள் திறக்கப்பட்டிருக்கின்றன.

மத்திய அரசு ஆதரவு

கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்கக் கேரள அரசு எடுக்க எண்ணியுள்ள நடவடிக்கைக்கு மத்திய அரசு தனது ஆதரவைத் தெரிவித்திருக்கிறது.

பல்கலைக்கழகத்தின் உத்தரவை மீறித் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் தனியார் கல்லூரிகளை அரசே மேற்கொள்ளவேண்டும் என்பது, அரசு எண்ணியுள்ள நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

எழுத்தர் வேலைக்கு பொறியியல் பட்டதாரி

ஒரு பாங்கியின் அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 14—

ஒரு பாங்கியில் எழுத்தர் (குமாஸ்தா) வேலைக்குச் சேருவதற்கு வேளாண்மைப் பொறியியல் பட்டம் பெற்றவர்களிடமிருந்து மனுக்கள் கோரப்பட்டுள்ளன.

நாட்டுடைமையாக்கப்பட்ட 'ஸ்டேட் பாங்க் ஆப் பிகானீர்' ஜெய்ப்பூர் கிளையில், எழுத்தர் வேலை காலியாக இருக்கிறது; வேளாண்மைத் துறைபற்றிய உதவியாளர் பணியையும் அந்த எழுத்தரே பார்க்கவேண்டுமாம்.

"இந்த வேலையில் சேருவதற்குக் குறைந்தபட்சத் தகுதியாக 5 ஆண்டுகள் வேளாண்மைப் பொறியியல் வகுப்பில் படித்துப் பட்டம்பெற்றவர்கள்தான் மனுச் செய்யவேண்டும்" என்று அந்த பாங்கி அறிவித்துள்ளது.

தி. மு. கழகப் பொதுச்செயலாளர்

டாக்டர் நாவலர்

53-வது பிறந்த நாள் விழா

16-7-72 ஞாயிறு மாலை 4-மணிக்கு

சென்னை --- திருவல்லிக்கேணி

என்.கே.டி. கலா மண்டபத்தில்

வரவேற்புரை: திரு. முரசொலி மாறன் எம்.ஏ., எம்.பி.

தலைவர்: திரு இராம. அரங்கண்ணல் எம். எல். ஏ.

பாராட்டுரை வழங்குவோர்:

முதலமைச்சர் டாக்டர் கலைஞர்

பேராசிரியர் க. அன்பழகன்

சிலம்புச் செல்வர் ம பொ.சி. (மேலவைத் துணைத் தலைவர்)

குன்றக்குடி அடிகளார்

நீலநாராயணன் எம்.எல் சி.

கே ஏ. மதியழகன் (சட்டப் பேரவைத் தலைவர்)

மூக்கையாத் தேவர் எம்.பி.

ஏ. கே. அப்துஸ் சமது எம்.பி.

நன்றியுரை: மு. வரதராசன்

★

இசை விருந்து: மாலை 4-மணிக்கு: இசைக் குயில்கள், சினிமா இசை அமைப்பாளர்கள் சூலமங்கலம் சகோதரிகள் & குழுவினர்.

நாடகம்: இரவு 9-மணிக்கு: கலைச்செல்வம் இராஜ் மோகன் அவர்கள் அண்ணாவாக நடிக்கும் 'அண்ணா ஒரு காவியம்'.

சென்னையில் தீவிபத்து:

பாதிக்கப்பட்டவர்கட்கு கழகத் தோழர்கள் நிவாரணப் பணி

சென்னை, ஜூலை 15—

சென்னை 109 வது வட்டம் தியாகராயநகர்ச் சாலையில் நேற்று பிற்பகல் 2-45 மணியளவில் ஏற்பட்ட தீவிபத்தினால் ஏறத்தாழ 300 குடிசைகள் எரிந்து சாம்பலாயின; 2,000 பேர் இதனால் வீடிழந்து தவித்தனர்.

பாதிக்கப்பட்ட மக்களை குடிசை மாற்று வாரியத் தலைவர் இராம அரங்கண்ணல், சென்னை மேயர் காமாட்சி சேயராமன், எஸ். எஸ் இராசேந்திரன் எம்.பி., ஜி. ஏ. அப்பன் எம். பி., வை. பாலசுந்தரம் எம். எல். ஏ., சீதாபதி, சா. கணேசன் எம். சி., சோ. கி. மூர்த்தி எம். சி., இரா. சம்பந்தம், இரா. சடகோபன், பகுதித் துணைச் செயலாளர் சா. கோவிந்தசாமி, பகுதிப் பொருளாளர் பி. மாரியப்பன், மதுரை வேணுகோபால், கி. மு தனபால், ஆ. ஜெயராமன், வட்டச் செயலாளர்கள் தியாகபத்ரன்; மு. நடராசன் மற்றும் கழகத் தோழர்கள் சென்று ஆறுதல் கூறினர்.

கேசரி உயர்நிலைப் பள்ளியிலும், மாநகராட்சித் திருமண மண்டபத்திலும் விபத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருக்கின்றனர்; அவர்களுக்கு மாநகராட்சி சார்பில் உணவு வழங்கப்படுகிறது.

தீவிபத்துச் செய்தியறிந்ததும் 12 தீயணைப்பு என்சின்களும், 4 தண்ணீர் லாரிகளும் விரைந்துவந்தன; தீயணைப்புப் படையினர் சுமார் இரண்டு மணி நேரம் போராடித் தீயை அணைத்தனர்.

உரிய நேரத்தில் அவர்கள் தீயை அணைத்ததால், தீப்பற்றிய பகுதிக்கு வடக்கே இருந்த 1,000 குடிசைகள் தப்பின; அருகில் இருந்த ஒரு பெட்ரோல் பங்குக்கும் -- பிளாஸ்டிக் தொழிற்சாலைக்கும் தீ பரவாமல் தீயணைப்புப் படையினர் தடுத்தனர்.

இந்த விபத்தில் ஒரு குடிசையில் சிக்குக்கொண்ட கண்ணன் என்னும் 5 வயது ஆண் குழந்தை தீயில் கருகிச் செத்துப்போனான்.

தீயை அணைக்கும்போது சசிதரன் (28 வயது) என்னும் தீயணைப்பு வீரர் ஏணியிலிருந்து தவறி விழுந்து காயமடைந்தார்.

செய்தி அறிந்ததும் சென்னைக் கலெக்டர் -- நகரப் போலீசுக் கமிஷனர் -- மாநகராட்சி ஆணையர் ஆகியோர் விரைந்து வந்து, தீவிபத்து ஏற்பட்ட இடத்தைப் பார்வையிட்டனர்; பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறி, நிவாரணப் பணிகளுக்கு ஏற்பாடு செய்தனர்.

5,000 கிராமங்களில் 50,000 வீடுகள்

தமிழ்நாட்டில் கட்டுவது பற்றிப் புதுடில்லியிடம் வலியுறுத்தல்

செய்தியாளர்களிடம் அமைச்சர் க. இராசாராம் விளக்கம்

சென்னை, ஜூலை 15--

"நாடு முழுவதிலும் குடிசைப் பகுதிகள் சீரமைப்புக்கு எல்லாவிதமான உதவிகளும் செய்து தருவதாக மத்திய அரசு கூறியிருக்கிறது; குடிசைப் பகுதிகள் சீரமைப்புத் திட்டத்துக்கு இந்த நிதியாண்டில் ரூ. 2.50 கோடி தர உறுதி கூறியிருக்கிறது"

என்று தமிழ்நாடு வீட்டு வசதித் துறை அமைச்சர் க. இராசாராம் அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அண்மையில் டில்லியில் நடைபெற்ற மாநில வீட்டு வசதித் துறை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு அமைச்சர் க. இராசாராம் சென்னை திரும்பினார்; செய்தியாளர்களிடம் மேலும் அவர் கூறியதாவது:—

"ரூ. 3.50 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டிருக்கும் வீட்டு மனை வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு ரூ. 73 இலட்சம் மட்டுமே ஒதுக்கியிருக்கிறது.

"தமிழ்நாட்டில் கிராமத்திற்கு 10 வீடுகள்வீதம் 5,000 கிராமங்களிலும் 50,000 வீடுகள் கட்டுவதுபற்றி மாநாட்டில் யோசனை கூறினேன்; இதற்குச் செலவு ரூ. 10 கோடியாகுமென்றும், சீரணி போன்ற அமைப்புக்களின் உதவியுடன் கட்டப்படும் இவ்வீடுகளின் செலவுத் திட்டத்தில் 20 சதவிகிதத்தைத் தமிழக அரசு ஏற்கும் என்றும், மீதி 80 சதவிகித உதவியைச் செய்ய மத்திய அரசு முன்வரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டேன்.

"குறைந்த வருமானமுள்ளோர் -- நடுத்தர வருமானம் பெறுவோர் வீடு கட்டுவதற்கு ஏழரை ஆண்டுகளில் திருப்பித் தரக்கூடிய கடன்கள் இப்போது அளிக்கப்படுகின்றன; இதை 20 ஆண்டுகளாக உயர்த்தலாம் என்று மத்திய அரசிடம் தமிழக அரசு யோசனை கூறியிருக்கிறது."

சேமிப்பு மூலம் வீடு கட்டித் தரும் திட்டத்திற்குப் பாராட்டு

பாங்கிகளில் நாள்தோறும் ஒரு ரூபாய் சேமிப்பதன் மூலம், வீடுகள் கட்டித் தருவதற்குத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது; இந்தத் திட்டத்திற்கு இந்த மாநாட்டில் பாராட்டு கிடைத்ததாகவும், விரைவில் ஆந்திரத்திலும் இது போன்ற திட்டம் வகுக்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

"தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாவின்படி, தஞ்சை மாவட்டத்தில் 2.75 இலட்சம பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன" என்று அவர் தெரிவித்தார்.

"மாராட்டிரமும், மைசூரும் இப்படிப் பட்டாக்கள் வழங்கப்படுவதற்குமுன் மத்திய அரசு தங்கள் மாநிலத்திற்கு நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டன; ஆனால் மத்திய வீட்டு வசதித் துறை அமைச்சர் குஜ்ரால், முதலில் திட்டத்தைத் தொடங்கிய பிறகே மத்திய உதவியை எதிர்பார்க்கவேண்டும்" என்று கூறியதாகவும் தெரிவித்தார்.

அவசரச்சட்டத்தின்மூலம் 'இஸ்கோ' நிறுவனத்தை மத்திய அரசு ஏற்றது

நட்டஈடு ஏதும் வழங்கப்படமாட்டாது

இரண்டாண்டுக் கால நிர்வாகத்தின் மூலம் உற்பத்திக் குறைவை அதிகரிக்கத் திட்டம்

புதுடில்லி, ஜூலை 15—

உற்பத்திக் குறைவு காரணமாகவும்--உற்பத்திப் பெருக்கத்தை உறுதி செய்யும்பொருட்டும் 'இந்தியன் அயர்ன் அண்டு ஸ்டீல்' ('இஸ்கோ') நிறுவனத்தின் நிர்வாகத்தை இந்திய அரசு மேற்கொண்டுவிட்டது.

குடியரசுத் தலைவரின் அவசரச் சட்டத்தின்மூலம், ஈராண்டுக் காலத்திற்கு இதன் நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்களான மார்ட்டின் பர்ன் நிறுவனத்துக்கு நட்டஈடு ஏதும் வழங்கப்படமாட்டாது.

இந்த நிறுவனத்தின் நிர்வாகத்தை அரசு மேற்கொண்டதன் நோக்கம் ஈடேறிவிட்டால், இரண்டாண்டுக் காலக் கெடு தீருவதற்கு முன்னேகூட நிர்வாகத்தை அரசு கைவிடுவதற்கும் அவசரச் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

அஞ்சல் -- தந்தி ஊழியருக்குக் குடியிருப்புப் பகுதிகள்

மத்திய அரசு ரூ. 2 கோடி அனுமதிக்கிறது

புதுடில்லி, ஜூலை 15—

அஞ்சல் -- தந்தி ஊழியர்களுக்குக் குடியிருப்புப் பகுதிகள் கட்டித் தருவதற்காக மத்திய அரசு ரூ. 2.50 கோடி அனுமதித்திருக்கிறது.

இத் தகவலை, அஞ்சல் -- தந்தி ஊழியர் நல ஆலோசனைக் குழுக் கூட்டத்தில மத்திய அரசின் தகவல்--தொடர்புத்துறை அமைச்சர் எச். என். பகுகுணா தெரிவித்தார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

16--7--72

கவுந்தம்பாடி

நகர தி. மு. க. சார்பில் இரவு 7-30 மணிக்கு கலைஞர் திடலில்; தலைவர்: இரா. துரை; பேசுவோர்: ஜி. பி. வெங்கிடு எம்.பி., கே. எஸ். ஆனந்தன், பு. க. பழனியப்பன், கே. கொளந்தவேலப்பன், கே. சோமசுந்தரம், இரா. நடராசன், கே.எம். செ.நாராயன், மணிவண்ணன், எம். வி. வெங்கிடுசாமி, நாச்சிமுத்து, கே. சி. முத்து,

17--7--72

குமாரபாளையம்

காலனி தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு சந்தைத் திடலில்; தலைவர்: கே. பி. கே. சுந்தரம்; பேசுவோர்: எஸ். எஸ். எம். சவுண்டப்பன், ஆர். எத்திராசன், கே.சுப்பிரமணியம், இராமசாமி, கரிகாலன், கு. நடேசன், வரதராசு, கு. பாசுகரன், அ. பழனிச்சாமி, டி. ஆர். கோபால்,

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, முரசொலி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.